வலிகாமம் மேற்கு பிரதேசசபை
யாழ்ப்பாண மாவட்டம்

---------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

## 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 22 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 20 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 நவம்பர் 30 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

## 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

அ. நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் சொத்துக்கள், வருமானங்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம | சொத்துக்கள் | | வருமானங்கள் | | பொறுப்புக்கள் | |
|---|---|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
| குறைத்துக் கூறல்கள் | | | 02 | 25இ500 | | |
| அதிகரித்துக் கூறல்கள் | 01 | 83இ970 | 01 | 1இ311இ850 | 04 | 13இ301இ672 |

ஆ. சபையின் பயன்பாட்டிலுள்ள ஏழு வாகனங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு இறுதிக் கணக்குகளில் கணக்கிடப்படாமையால் மோட்டார் வாகனங்களும் வண்டிகளினதும் பெறுமதி குறைத்து கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது.

1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

---------------------------------------------------------------

பிரதான பேரேட்டின் பிரகாரம் உள்;ர் அபிவிருத்தி கடன் வட்டி ரூபா 1,263,700 காட்டப்பட்டுள்ளபோதும் இறுதிக்கணக்குகளில் ரூபா 1,677,752 ஆக காட்டப் பட்டுள்ளது

1.3.3 இணக்கமின்மைகள்.

------------------------

சட்டங்கள், விதிகள், மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் பின்வரும் இணங்காத் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு | விபரம் |
|---|---|
| 1988ம் ஆண்டின் பிரதேசசபைகள் நிதிநிர்வாக ஒழுங்கு விதி | |
| அத்தியாயம் ஐஐஐ பிரிவு 66 | செயலாளர் 1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 150(4)ம் பிரிவின் கீழ் வீதவரி வாடகை, குத்தகை மற்றும் உரிம நிலுவைகள் ரூபா 5,668,174 அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதி | |
| நிதி ஒழுங்கு விதி 571 | 2001 – 2011 வரையான காலங்களுக்குரிய காலங்கடந்த ரூபா 852,141 பெறுமதியான வைப்புக்கள் வருமானத்திற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 4இ138இ742 பெறுமதியுடைய நான்கு கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது சான்றுறுதிப்படுத்த முடியாதுள்ளது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமான மிகை பூச்சியமாக விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமான மிகையாக ரூபா 16இ476இ671 விளைந்திருந்தது.

### 2.2 நிதிசார் கட்டுப்பாடு

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 8இ990இ069 வேறுபாடு ஏற்பட்டதுடன் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 3இ173இ507 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பந்துள்ளன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| i.இறைகளும் வரிகளும் | 1இ858 | 1இ823 | 5இ390 |
| ii.குத்தகை வாடகைகள் | 9இ592 | 9இ888 | - |
| iii.அனுமதிப்பத்திரக்கட்டணங்கள் | 1இ288 | 1இ768 | - |
| iv.வேறு வருமானங்கள் | 38இ560 | 46இ809 | 37இ757 |

2.3.2 நீதிமன்றத் தண்டப்பணங்கள்

நீதவான் நீதிமன்றிலிருந்து 2013 ஓகஸ்ட் - டிசம்பர் வரையான காலங்களுக்குரிய நீதிமன்றத்தண்டப் பணங்களும் குற்றப்பணங்களும் ரூபா 502,102 மீளாய்வாண்டு காலத்தில் பெறப்பட்டிருக்கவில்லை.

2.3.3 முத்திரைத்தீர்வை கட்டணம்

அ. 2006 – 2012 ம் ஆண்டுவரை கிடைக்க வேண்டிய முத்திரைத் தீர்வைகள் ரூபா 32இ867இ361 வருமதியாக கணக்கிடப்பட்டதேயன்றி அறிக்கையிடும் திகதி வரையும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

ஆ. மீளாய்வாண்டிற்கான முத்திரைத் தீர்வைகள் ரூபா 15,454,635 வருமானமாகவும் வருமதியாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. அறிக்கையிடும் திகதி வரையும் அறவிட ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.3.4 <u>வீதவரி நிலுவை அறவீடு</u>

மீளாய்வாண்டில் வீதவரி நிலுவை ரூபா 5இ390இ169 தொடர்பில் 1987ம் ஆண்டில் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 158ம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் வீதவரியினை செலுத்தத் தவறியவர்களது அசையும் ஆதனங்களைத் தடை செய்து நிலுவைத் தொகையினை அறவீடு செய்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.4 சொத்து முகாமைத்துவம்

---

2.4.1 பயன்பாடற்ற வாகனம்

---

சபையின் 252-6540 இலக்க பிக்கப் வாகனம் கடந்த 10 வருடங்களாக பயன்பாடின்றி சபையின் வாகன தரிப்பிடத்தில் காணப்படுகின்றது.

2.5 செயற்பாடுகளின் செயற்திறமையின்னை

---

பல்வேறு நோக்கங்களுக்காக 2010-2012 காலங்களில் மலசலகூட மற்றும் சனசமூக நிலைய நன்கொடை ரூபா 186,846 குறித்த நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படாது மீளளிக்கப்படற் பாலதான நானாவித வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருப்பது பிரதேச மக்களுக்கு கிடைக்க வேண்டிய நன்மைகள் பெறப்பட முடியாமையை காட்டுகின்றது.

2.6 ஒப்பந்த நிவாகம்:

---

2.6.1 வேலை முடிவுறுத்துவதில் காலதாமதம்

---

மீளாய்வாண்டில் ரூபா 3இ889இ308 பெறுமதியான 10 வேலைத்திட்டங்கள் மீளாய்வண்டு இறுதிவரை நிறைவேற்றப்படாது சில்லறைக் கடனாளிகள் கணக்கினூடாக எதிர்காலத்தில் நிறைவேற்ற ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது சபையின் வேலைகள் நிறைவேற்றுவதில் காலதாமதம் ஏற்பட்டிருப்பதனை அவதானிக்க கூடியதாகவுள்ளது.

2.6.2 நிறைவேற்றப்படாத செயற்திட்ட விபரம்

---

மீளாய்வாண்டின் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட ரூபா 4,405,000 பெறுமதியான 05 வேலைத்திட்டங்கள் முற்றாக கைவிடப்பட்ட நிலையில் காணப்படுவது மக்களது பார்வைக்கு சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் உண்மைத்தன்மை மறைக்கப்பட்டிருப்பதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

2.6.3 வரவு செலவுத் திட்டத்தினால் அங்கீகரிக்கப்படாத வேலைத்திட்டங்கள்

மீளாய்வாண்டின் வரவு செலவுத் திட்டத்தினால் அங்கீகரிக்கப்படாத ரூபா 640இ016 பெறுமதியான 3 வேலைத்திட்டங்கள் சபை நிதியினால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

| வேலை விபரம் | தொகை (ரூபா) |
|---|---|
| அராலி மழைநீர் சேகரிப்பு இட நில அளவை | 18இ000 |
| சுழிபுரம் ஆறுமுக வித்தியாலய வீதி | 396இ986 |
| சிவன் கோவில் வீதி | 225இ030 |
| | 640இ016 |

3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைகளும் கட்டுப்பாடுகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

அ. வரவு செலவுத் திட்டம்
ஆ. வருமான சேகரிப்பு
இ வாகன பயன்பாடு
ஈ. சில்லறைக் கடனாளிகள்
உ. நானாவித வைப்புக்கள்
ஊ. முற்பணம்